Registered as a Newspaper in Sri Lanka. No. A 13.

# ஐக்கியதீபம்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக்குழு) வெளியீடு

மலர்: 29
இதழ்: 8
சித்திரை

யாழ்ப்பாணம்
1974

## இந்த இதழில்....


- ஆசிரியர் தலையங்கம்
- கூட்டுறவுச் செய்திகள்
- இலங்கையை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியைக் கூட்டுறவு இயக்கம் எவ்வாறு தீர்க்க உதவும்
- இலங்கையை எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதில் கூட்டுறவின் பங்கு
- நான் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்தால்
- கூட்டுறவாளர் திரைப்போட்டி

# ஐக்கியதீபம்

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு "

மலர் 29 | யாழ்ப்பாணம், சித்திரை 1974 | இதழ் 8

## இனிப்பும் கரிப்பும்

சீனியின் விலை உயர்வால் இன்று எல்லோரும் குறிப்பாக சாதாரணமக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பொதுமக்கள் அதிருப்தி அடைந்திருப்பது சம்பந்தப்பட்டோருக்குத் தெரியாமலில்லை. ஆனால், உலகச்சந்தையிலே சீனியின் விலை உயர்ந்துள்ளதனால் சீனியின் பாவனையைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

துன்பத்திலும் ஓர் ஆறுதல் கூறு உண்டு என்பார்கள். இந்த இக்கட்டான நிலையை எமக்குச் சாதகமாகத் திருப்புவதற்கு வாய்ப்புண்டு — சீரான திட்டமிடல் மூலமும் செயற்பாடுகள் மூலமும்.

இரண்டாவது உலகப்போர் மூள்வதற்கு முன் பருத்தித்துறைப் பகுதியிலுள்ள பொலிகண்டியில் ஜெர்மன் தேசத்தைச் சேர்ந்த ஒருவர் பதநீரிலிருந்து சீனி உற்பத்தி செய்யும் திட்டத்தினை வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தார். ஆனால் அவப்பேறாக இன்று இத்தொழிற்சாலை இயங்காது சீர்குலைந்து இருக்கின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மாவட்ட அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் பெரிய ஆரம்பப் ப. நோ. கூ. சங்கங்களில் சில பனங்கட்டி உற்பத்தியை மேற்கொண்டு ஓரளவு வெற்றி கண்டன. இன்றைய சூழ்நிலையில் இத்தகைய முயற்சிகள் அதாவது பனஞ்சீனி பனங்கட்டி உற்பத்தி தீவிரப்படுத்தப்பட்டால் சீனி இறக்குமதியைக் குறைப்பதுடன் அந்நிய செலாவணியை மிச்சம் பிடித்து உள்ளூரிலே வேலை வாய்ப்புக்களையும் பெருக்கலாம். இன்று யாழ் மாவட்டத்திலே கள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருவதால் பதநீரைக் கூடுதலாக இறக்கும்படி அவை தமது உறுப்பினர்களைத் தூண்டலாம். பதநீர் இறக்குவதற்கு வேண்டிய அநுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது என உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தியாவிலே பதநீரிலிருந்து பனஞ்சீனி செய்வதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

இதே போன்று மலைநாட்டுப் பகுதியிலே கித்துள் கள்ளிலிருந்து கித்துள் பனங்கட்டி உற்பத்தி செய்வதை ஊக்குவிக்க அரசாங்கம் பயன் முனைப்

பான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

பனஞ்சீனி, பனங்கட்டி, கித்துள் பனங்கட்டி போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசாங்கம் உத்தரவாத விலைத் திட்டம் ஒன்றினை மேற்கொள்வது பயனளிக்கும்.

இந்தியாவிலே கருப்பஞ்சீனி உற்பத்தி குடிசைக் கைத்தொழில் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் அங்கு கணிசமான வெற்றியளிக்கின்றது. இக்குடிசைக் கைத்தொழிலுக்கு உதவும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால் இங்கு கருப்பஞ்சீனி உற்பத்தியில் நாம் கடைப் பிடித்து வரும் கொள்கையோ வேறு. கந்தளாயில் மிகப்பெரும் சீனி ஆலையை நிறுவி சந்தளாய், கல்லோயா போன்ற பகுதிகளில் பெரும் கரும்புத் தோட்டங்களை நடாத்தி வருகின்றோம். இதன் விளைவு நட்டத்திற்குமேல் நட்டம். கருப்பஞ்சீனி உற்பத்தி இங்கு பெருகவுமில்லை. சீனி இறக்குமதி குறையவுமில்லை. பதிலாக சீனி கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் நட்டங்களுக்கு ஈடு செய்யும் மூகமாக மதுபானத் தயாரிப்பிற்கு வெல்லப்பாகைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. எனவே இதுபற்றி அரசாங்கம் மீளாய்வு செய்து கருப்பஞ்சீனி உற்பத்தியையும் சர்க்கரை உற்பத்தியையும் குடிசைக் கைத்தொழில் அடிப்படையில் மேற்கொள்வது சாலவும் பொருந்தும். அக்கராயன் குளத்தில் தனியார் கம்பெனி ஒன்று கரும்புத் தோட்டமொன்றை நடாத்தி சர்க்கரை உற்பத்தியில் வெற்றியீட்டியமை ஈண்டு குறிக்கற்பாலது. இதுகுறித்து அரசாங்கமும் குறிப்பாக கூட்டுறவு இயக்கமும் கூடிய அக்கறை செலுத்துவது பயன் தரும்.

பல ஐரோப்பிய நாடுகளிலே சீனி பீற்றூட்டிலிருந்து சீனி உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. சில ஆண்டுகளுக்கு முன் விவசாயத் திணைக்களம் நடாத்திய பரிசோதனைகளிலிருந்து யாழ் மாவட்டத்திலே சீனி பீற் வெற்றிகரமாகப் பயிரிடப்படலாம் எனக்கண்டு பிடிக்கப்பட்டது. இதனையொட்டி விதை கிழங்குகளைப் பெறுவதற்கு வட பகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம் பலத்த முயற்சிகளை மேற்கொண்டும் அவை ஏனோ பலிக்கவில்லை. இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியில் சீனி பீற்றினைப் பயிரிடுவதன் மூலம் நிலைமையை ஓரளவு சமாளிக்கலாம். மேலும் சீனி பீற்றூட்டிலிருந்து சீனி தயாரிக்கும் தொழில் குடிசைக் கைத்தொழில் அடிப்படையில் மேற் கொள்ளக் கூடிய தொன்றாக இருப்பதனால் வேலைவாய்ப்புக்கள் பெருகும். கருப்பஞ்சீனி உற்பத்தியில் மட்டும் அரசாங்கம் தங்கியிருக்காது இது பற்றியும் ஆலோசித்து சீனிபீற் உற்பத்தியைக் கூட்டுறவு இயக்கத்தினூடாக மேற்கொள்ளலாம்.

மேற் கூறிய வழிகளில் அரசு செயற்படுமானால் இன்றைய இக்கட்டான சூழ்நிலையை எமக்குச் சாதகமாகத் திருப்பி நீண்டகாலத் தீர்வையும், தன்னிறைவையும் காண வழி பிறக்கும்.

# கூட்டுறவுச் செய்திகள்

## யாழ்ப்பாணத்தில் அரிசி விலையேற்றத்திற்குக் காரணம்

வலி கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்தின் இருபாலைச்சந்திக் கிளையிலுள்ள புதிய மேல்மாடிக் கட்டிடம் இருபாலை ஐக்கிய பண்டசாலையின் முன்னாள் தலைவர் திரு. நா அருளம்பலத்தினால் அன்மையில் சமய ஆசார முறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு மேற்படி சங்கத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறியதாவது :

யாழ்ப்பாணத்தில் அரிசி விலை ஏற்றத்திற்குக் காரணம் தனிவியாபாரிகளின் பதுக்கலேயாகும். கடந்த சில தினங்களுக்கு முன் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற உணவுற்பத்தி இயக்கம் பற்றிய கூட்டத்தில் வடமாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்லை, நெல்சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்து எமது பகுதியிலிருக்கும் 21 ப. நோ. கூ. சங்கங்களினூடாகவும் விற்பனை செய்தல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தால் யாழ்ப்பாணத்தில் அரிசி விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

கோப்பாய் தெற்கு கிளைக் குழுவினதும், விற்பனை நிலைய முகாமையாளரதும் அயராத உழைப்பினாலும், ஊக்கத்தாலும் சங்க நெறியாளர் குழு மேல்மாடிக் கட்டிட விஸ்தரிப்பிற்காக ரூ. 230, 000/– ஒதுக்கி பூர்த்தியாக்கியுள்ளனர். இப்புதிய கட்டிடம் புடவை, இரும்பு நாசினி வகைகள் விற்பனை செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இச்சங்கம் புனரமைப்பின் பின்பு முதலாவது நிதியாண்டில் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவை, நிகர இலாபமாகப் பெற்றுள்ளது. இக் கட்டிடத்தினைப் போல் கோப்பாய் தெற்கு கட்டப்பிராய் கிளைக்கும் கூடிய விரைவில் ஒரு கட்டிடம் அமைக்கவுள்ளோம். காரியாதிகாரி அவர்களும் உரை நிகழ்த்தினர்.

கூட்டுறவு ஆக்க ஆணையாளர், கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்களுக்கும், தேசீய கூட்டுறவுச் சபையின் பாவட்டத் தலைவர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையின் (இல. 12/154(74) தமிழாக்கம்

# கூட்டுறவாளர் தினம் 1974

இவ்வாண்டில் 6-7-74-ல் இலங்கை முழுவதும் கூட்டுறவாளர் தினத்தை ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் ஒத்துழைப்புடன் கொண்டாடுவதற்கு கூட்டுறவுத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. இதற்கான வேலைத் திட்டம் கீழே வரையறுக்கப்படுகின்றது. ''கூட்டுறவுச் சங்கமும் பிரதேச அபிவிருத்தியும்'' என்பதே இவ்வாண்டின் இலட்சிய வாசகமாகும். எனவே, இவ்வாண்டு எமது கொண்டாட்டங்கள் பிரதேச அபிவிருத்தியைப் பிரதானமாய் தழுவியதாய் இருக்கும். மேலும், கடந்த ஆண்டின் இலட்சிய வாசகமான உணவுற்பத்தியிலும் கவனம் செலுத்தப்படும். இவ்வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் தேசிய கூட்டுறவுச் சபையினதும், அதன் செயலாளரினதும் உதவியைக் கோருமாறு தாங்கள் தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

## மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்குச் சங்கங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து மேற்படி தினத்தில் வேலை தொடங்கும்பொழுது உங்கள் பகுதியிலுள்ள ப, நோ. கூ. சங்கங்களினதும், ஏனைய சங்கங்களினதும் கலந்தாலோசனையுடன் திட்டமிடுவது விரும்பத்தக்கது. மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் போன்று இத்திட்டங்களும் அவ்வப் பகுதியிலேயுள்ள ஆள்பலத்தையும், கைத்தொழில் நுட்ப அறிவையும்,

வேறு ஏதேனும் மூலவளங்களையும் பயன்படுத்தவேண்டும். முக்கியமாக இவை பொருளாதார ரீதியாக உருப்படக்கூடிய திட்டங்களாய் இருத்தல் வேண்டும், இத்திட்டங்கள் பெருமளவு மூலதனத்தை முடக்கக்கூடியவையாகவோ அல்லது வெளியிலிருந்து பெருமளவு கடன் பெற வேண்டியவையாகவோ இருத்தலாகா, பொதுவாக அவை சிறு அல்லது நடுத்தர திட்டங்களாகவும் சங்கங்களிடமுள்ள நிதி, முகாமை வசதிகளுடன் செயற்படுத்தக்கூடியவையாகவும் இருத்தல் வேண்டும். அவை விவசாய அல்லது கைத்தொழில் திட்டங்களாகவும் இருக்கலாம்.

சங்கங்கள் திட்டங்களை உடனடியாகத் தயாரித்து அவைபற்றிய விபரங்களை உங்களுக்குச் சமர்ப்பிப்பதற்கு ஊக்கப்படுத்தப்படல் வேண்டும். இவற்றினை உங்களது அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் செயற்படுத்துதல் வேண்டும். எல்லாச் சங்கங்களும் தமது உத்தேச திட்டங்களைச் சமர்ப்பித்ததும், எவற்றினைச் செயற்படுத்துவது என்பதை நீங்கள் தீர்மானித்தல் வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களின் பட்டியல் ஒன்றை எனது தகவலுக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

மேலும், சென்ற ஆண்டு போன்று இம்முறையும் சங்கங்கள் உணவுற்பத்தியில் கவனம் செலுத்துவதற்கு ஊக்கப்படுத்தப்படலாம்.

# கட்டுரைப் போட்டிகள்

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் உதவியுடன் கூட்டுறவு அடிப்படையில் தேசிய ரீதியிலான கட்டுரைப் போட்டியும் ஒழுங்கு செய்யப் படலாம். கீழேதரப்பட்ட வகையில் போட்டி பிரிக்கப்படலாம்.

1. 6-ந் தரம் தொடக்கம் 9-ம் தரம் வரை பயிலும் மாணவர்கள்
2. 10-ந்தரத்திலும் அதற்கு மேற்பட்ட தரங்களிலும் பயிலும் மாணவர்கள்
3. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள்

9-ந் தரம் வரை பயிலும் மாணவர்கள் பின்வரும் விடயங்கள் குறித்து கட்டுரைகள் வரைதல் வேண்டும்

1. கூட்டுறவு உங்களை அழைக்கின்றது.
2. நமக்கு நாமே உதவி செய்தல் கூட்டுறவாகும்.

10-ந் தரத்திலும் அதற்கு மேற்பட்ட தரங்களிலும் பயிலும் மாணவர்கள் பின்வரும் விடயங்கள் குறித்து

கட்டுரைகள் வரையலாம்.

1. வாழ்க்கைச் செலவின் உயர்வும் நுகர்ச்சிக் கூட்டுறவும்.
2. பிராந்திய அபிவிருத்தியும் கூட்டுறவு இயக்கமும்.

கூட்டுறவுப் பணியாளர் பின்வரும் விடயங்கள் குறித்து கட்டுரைகள் வரைதல் வேண்டும்.

1. இலங்கைக் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமை எங்ஙனம் அபிவிருத்தியடைதல் வேண்டும்.
2. நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களில் மங்கிவரும் இலாபங்களுக்கு ஏனைய வழிகளில் புதுவருமானங்களை இணைத்தல்.

## போட்டி நிபந்தனைகள்

1. எல்லாக் கட்டுரைகளும் மாவட்ட நடுவர் குழுவிடம் 15-5-74-க்கு முன்னர் அனுப்பப்படுதல் வேண்டும்.
2. மாணவர்களால் வரையப்படும் கட்டுரைகள் அதிபர் / வகுப்பாசிரியர்களின் உறுதிப் பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சங்கப்பணியாளர்களின் கட்டுரைகள் சங்கத் தலைவரின் உறுதிப் பத்திரத்துடன் இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.
3. 10-ம் தரத்திலும் அதற்கு மேற்பட்ட தரங்களிலும் பயிலும் மாணவர்களின் கட்டுரைகள் 1000-க்கு மேற்படாத சொற்களில் அமைதல் வேண்டும்.

6—9-ந் தரங்களில் பயிலும் மாணவர்களின் கட்டுரைகள் 250 சொற்களுக்கு மேற்படாதவையாக அமைதல் வேண்டும்.

பணியாளர்களின் கட்டுரைகள் 750 சொற்களுக்கு மேற்படாதவையாக அமைதல் வேண்டும்.

கட்டுரைகள் தெளிவாகவும், அழகாகவும், கட்டுரையாளரின் சொந்தக் கையெழுத்தில் "புல்ஸ்காப்" தாளில் ஒரு பக்கத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

4. கட்டுரைப் போட்டியில் பங்கு பற்றுவோர் ஏதேனும் விடயம் குறித்து ஒரு கட்டுரையை மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும்.

பரிசுகள் :-

மாவட்ட அடிப்படையில் முதலாம், இரண்டாம், மூன்றும் பரிசுகள் பெறுப

வர்களுக்கு ரொக்கமாக முறையே ரூபா 30 -, 20/-, 15-ந்தும், சான்றிதழ்களும் வழங்கப்படும்:

தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றும் பரிசுகள் பெறுபவர்களுக்கு ரொக்கமாக முறையே ரூபா 100/-, 75/-, 50/-ம் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**முடிவு திகதி 15-5-1974**

கட்டுரைகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி: (உங்கள் பிரிவிலுள்ள) கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர், கூட்டுறவு அலுவலகம். கட்டுரை அனுப்பும் கடிதஉறையின் மேல்பக்க இடது மூலையில் "கூட்டுறவாளர் தினம் 1974 - கட்டுரைப்போட்டி', என்று எழுதப்படல் வேண்டும்.

# ஆனைக்கோட்டையில் பயிற்சி வகுப்பு

மானிப்பாய் பரிஷ் ப.நோ. கூ. சங்கம் நெறியாளர்களுக்கான ஒரு பயிற்சி வகுப்பினை அண்மையில் நடாத்தியது. மேற்படி சங்கத்தலைவர் திரு. சு. தர்மசீலன் தலைமை வகித்து அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினர்.

இப்பயிற்சி வகுப்பில் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. சி. நாகலிங்கம் பேசுகையில் கூட்டுறவுச் சங்கங்களை வெற்றிகரமாக நடாத்த வேண்டுமானல் உபவிதிகளுக்கமைவாக நடக்க வேண்டும் என்பதை வலியுறுத்திஞர்.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுவுச் சபையின் யாழ்கிளைச் செயலாளர் திரு. பொ. செல்வரத்தினம் பேசுகையில் தாபனத்தின் சிகரம் நெறியாளர்குழு. இக்குழு செம்மையாக இருக்காவிட்டால் கூட்டுறவு வளரமாட்டாது. எனவே நிறைவான கூட்டுறவு அறிவினைப் பெற்று அதன்படி கூட்டுறவு வாழ்வினை வாழவேண்டும். கூட்டுறவு அறிவு பெறுவதற்கு இருக்கும் வாய்ப்புக்களைத் தவறவிடக்கூடாது.

காரியாலயப் பரிசோதகர் திரு. வி. இ. சண்முகம், யாழ் கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளர் திரு. ஆ. மகேஸ்வரா ஆகியோரும் கலந்துரையாடலை நடாத்தினர்.

மேற்பிரிவில் முதலாவது பரிசுபெற்ற கட்டுரை

# இலங்கையை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியைக் கூட்டுறவு இயக்கம் எவ்வாறு தீர்க்க உதவும்

—சொக்கலிங்கம் செந்தில்மோகன்
(மகாஜனக் கல்லூரி)

வியத்தகு விஞ்ஞான வளர்ச்சியடைந்துள்ள இந்நூற்றாண்டிலே, முன்னேறி வரும் நாடுகள் பல பொருளாதாரப் பிரச்சினைகளால் அல்லலுறுகின்றன. இந் நெருக்கடியான நிலைமையை எம் ஈழவளநாடும் கொண்டுள்ளது. இந்நிலைமையை அணுகித்தீர்க்கும் முறை பலவகைப்படினும், கூட்டுறவு இயக்கத்தால் இதைத் தீர்க்கலாம் என்பதை இந்த இயக்கம் மூலம் பொருளாதார சுபீட்சமடைந்த சுவீடன், பிரான்சு, பெரியபிரித்தானியா போன்ற நாடுகள் எமக்குணர்த்துகின்றன. எனவே எம் தாய்நாடாம் இலங்கையினை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியையும் கூட்டுறவு இயக்கம் மூலம் தீர்க்கலாம் என்பதில் ஐயமில்லை.

நாம் அடிப்படைக் கூட்டுறவுத் தன்மையைப் பேணும் வேளையில் பொருளாதாரத் தேவைகளுக்கேற்ப கூட்டுறவு முறையைப் பயன்படுத்தவேண்டும். அவ்விதம் செய்யின் எமது இலங்கை வளநாடு கூட்டுறவு இயக்க மூலம் பொருளாதார பலம் கொண்ட நாடாக மிளிரும்.

இலங்கையை நோக்குங்கால், இப்படியான நெருக்கடி நிலைமை வரக்காரணம் என்ன? இதற்கு இலங்கையின் கடந்த கால்நூற்றாண்டு வரலாறு விடை பகர்கிறது. எமது நாடு சுதந்திரம் அடையும் வரை பொருளாதார வளம் பெருகியிருந்த பிரித்தானியா தனது பணத்தில் பொருள்களை சாதாரண விலைக்கு மக்களுக்கு வழங்கி வந்தது; தொழில்களும் மக்களைச்

சென்றடைந்தன. இதனால் எமது நாட்டு மக்கள் ஆடம்பரமான, தேசப்பொறுப்பற்ற, எளிமையான வாழ்வை இலகுவாக நடத்தி வந்தனர். இந்நிலைமை சுதந்திர இலங்கைக்கு ஒரு சோதனையாய் அமைந்தது. எமது அரசுகள் அவ்வப்போது ஆடம்பரப் பொருள்களையும், மற்றும் பொருள்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தன. இவற்றிற்கு தேயிலை, றப்பர், தெங்குப்பொருள்கள் என்பவை அந்நிய செலாவணியில் ஈடுகொடுக்க முடியுமா? எனவே அந்நிய செலாவணி செலவாக கடன்முறை ஏற்கப்பட்டது. இவற்றைவிட உள்நாட்டு சேமிப்பின்மை, தொழில் நுட்ப வல்லுனர் இன்மை போன்றவையெல்லாம் தலைவிரித்தாடின. இவற்றோடு இலவச அரிசி, இலவச சுகாதாரம், இலவச பிற சில உதவிகள் என்பவையும் பொருளாதார முடத்தை ஏற்படுத்தின.

பொருளாதார வளம் பெருக குடிசனக் கட்டுப்பாடு அத்தியாவசியமானது. ஆனால் இலங்கையில் குடிசனப் பெருக்கம் வருடாவருடம் ஏறத்தாழ மூன்று இலட்சத்து எழுபதினாயிரத்தால் பெருகி வருகிறது. அவர்கள் வாழ்வு அரசின் பொருளாதார சுபீட்சத்தில் தங்கியுள்ளது. குடும்பக்கட்டுப்பாடு செய்யும் சேவை அரசிடம் இருந்து, கூட்டுறவு இயக்கத்தால் பரிபாலிக்கப்பட்டு வரலாம். அப்படியாயின் இது பொது மக்கள் மத்தியில் வெகுவாகப் பரவிப் பலனளிக்கும்.

இப்போது ஏறத்தாழ ஆறு இலட்சம் பேர் எமது நாட்டில் வேலையின்றி உள்ளனராம். இது ஏறத்தாழ எமது நாட்டின் சனத்தொகையின் ஐந்து வீதம் எனலாம். எனவே இந்நிலைமையை அரசாங்கம் தனியே அகற்றுவது கடினம். எனவே கூட்டுறவு இயக்கம் சங்கங்கள் மூலம், மக்களின் சேமிப்பால் கிடைத்த பணத்தைக் கொண்டும், கூட்டுறவுப் பங்குகளைக் கொண்டும் ஒரு அபிவிருத்தித்தாபனம் ஏற்படுத்தி அதன் உதவியோடு பல குடிசைக் கைத்தொழில்களை வளர்ப்பதோடு பிற தொழிலகங்களையும் நிறுவலாம். கூட்டுறவுச் சேவையில் வேலையற்றோரை சேர்த்து வேலையில்லாப் பிரச்சினையைச் சிறிது சீராக்கலாம்.

அரசாங்கம் பலவித அபிவிருத்தித் திட்டங்களை ஏற்று நடத்த முடியாமல்

இருக்கிறது. பயிரிடாத நிலங்கள், உபயோகிக்காத மூலப் பொருட்கள் என்பவற்றை கூட்டுறவு இயக்கம் தனது பணத்திலும், பொதுமக்களின் சேமிப்புப் பணத்திலும் பெற்று, தனது பராமரிப்பில் பல அபிவிருத்திகள் செய்ய முன்வந்து உதவலாம். இதன் மூலம் வேலையில்லாப் பிரச்சினை மட்டும் ஒழிவதன்றி, அரசாங்கத்திற்கும் பலவிளை பொருள் கிடைப்பதால் அந்நிய செலாவணி எஞ்ச வழியுண்டு.

கூட்டுறவு இயக்கம் பாரிய ஒரு பொறுப்பை இப்போது கொண்டுள்ளது. பொதுமக்களுக்குச் சிக்கனமாக வாழ்ந்து சேமிக்குமாறு அது தூண்ட வேண்டும். அப்போது, உள்நாட்டிலே சேமிப்பு பெருகும். இன்று கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்க வசமாயிருப்பதால் பணத்தை அரசு பெறக் கூடியதாயுள்ளது. அத்தோடு மக்களுக்குச் சிறிதளவாவது வட்டியும் கொடுக்கக் கூடியதாய் உள்ளது. எமது அரசின் வட்டிப் பணம் எம் நாட்டில் எவர் கையிலிருந்தாலென்ன? வெளிநாடு செல்லவில்லையாயின் நன்மைதானே! இதனால் பலதிட்டங்களில் இச்சேமிப்புப்பணம் உபயோகப்படக்கூடியதாய் உள்ளது.

எமது நாட்டில் அரசாங்கம் மக்களுக்கு வீடுகட்டப் பணம் கொடுக்கிறது. இக்கடன் கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது. இத்திட்டத்தையும் கூட்டுறவு இயக்கம் பொறுப்பேற்று சீரிய முறையில் நடாத்தலாம்.

கைத்தொழில், மற்றும் தொழில்துறைகளை நோக்குங்கால் அவை சீரமைக்கப் படுதல் மிக அவசியமாகும். கைத்தொழில் துறையில் போதிய மூலதனமின்மை, தொழில் ஊழல், நாட்டுணர்வற்ற தொழிலாளர், வேலை நிறுத்தம், மூலப் பொருள் பற்றாக்குறை, தொழில் நுட்பத்திறன் குறைவு என்பவை மலிந்துள்ளன. இவற்றில் கூட்டுறவு இயக்கம் பங்குபற்றி நாட்டுணர்வுள்ள நற்றொழிலாளரை ஈடுபடுத்தி, தொழில் முறையைச் சீராக்கலாம், தொழிலாளர் நலன் பேணுவதற்கு சில வசதிகளையும் கூட்டுறவுச் சங்கங்கள் செய்து கைத்தொழிலைச் சீராக்க வேண்டும்.

உடைத்துணிப்பிரச்சினையைக் கவனித்தால், வருடாவருடம் எத்தனையோ இலட்சரூபாய் பெறுமதியான துணிகள் இறக்குமதி

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

மேற்பிரிவில் இரண்டாவது பரிசு பெற்ற கட்டுரை

# இலங்கையை எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதில் கூட்டுறவின் பங்கு


**சி. மருதையினர்**
(மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை)


கூட்டுறவு இன்று நாட்டுயர்வை நோக்கி நடைபோடுகிறது. வறுமையில் வாடிடும் மக்களின் மனங் குளிரவும், பசுமைப் புரட்சியினுல் நாடு பலம் பெறவும், சிறுமையுற்ற பொருளாதாரத்தைச் சீர்செய்யவும் உருவானதே கூட்டுறவு இயக்கம். தனக்கு நிகர் உலகில் இல்லை என்று எத்தனையோ நாடுகள் தனித்துவம் பெற்றோங்குகின்றன. வனப்புடனும், வளமுடனும் வாழ அந்நாடுகளுக்கு வழிகாட்டிக் கொடுத்தது கூட்டுறவு இயக்கம். சமவுடமைக் குடியரசாம் ரஷ்யா சர்வ துறைகளிலும் புகழுற்றது கூட்டுறவு இயக்கத்தினுலேயே. சலியாத உழைப்பினுல் தம்முயிரை நாட்டிற்கே பலியாகக் கொடுத்து நாட்டை நலியாது பாதுகாக்கின்றனர் ஜப்பானிய மக்கள். எந்தச் சிறு கைத்தொழிலையும் செய்யும் ஆற்றல் அவர்களிடம் தவழ்கிறது.

எண்ணற்ற கூட்டுறவு இயக்கங்கள் இலங்கையில் இயங்குகின்ற போதிலும் அதன் பொருளாதாரம் மண்ணுற்று மடிவதேனே வென்று ஏங்கித்தவித்தார்கள் எம்மவர்கள். ஏங்கித் தவித்த அறிஞர்கள் இன்று பிறநாட்டிடமிருந்து ஏந்திப் புசிப்பதை நிறுத்தியுள்ளார்கள். எப்படி? அந்நியராட்சியினுல் இலங்கை அழிவுற்றதை ஆய்ந்து தெளிவுற்ருர்கள். ஏட்டுச்சுரைக்காய்க் கல்வி நாட்டுக்குதவாமை கண்டு எழுச்சியுற்ருர்கள். மக்கள் வெள்ளம் பொங்கி வருவதை மனத்தில் நிறுத்திஞர்கள். சாய்ந்து விழும் அந்நியச் செலாவணியைத் தலைநிமிர வைத்தார்

கள். வேகமாய்ப் பணி புரிந்து வேலையில்லாப் பிரச்சினைக்கு விடிவுபெற விழைந்தார்கள். இவை அனைத்தையும் கூட்டுறவு இயக்க மூலம் நிவிர்த்தி செய்து நாட்டுயர்வைக் காண விருப்பமுற்றார்கள். அதன் ஒரு அம்சமாகவே ஏட்டு முறைக் கல்வி இன்று கூட்டுறவுக் கல்வியுடன் தொடர்பு படுத்தப்பட்டிருக்கிறது.

இக்காலம்வரை நடைமுறையிலிருந்து வந்ததும், இப்பொழுது நடைமுறையிலிருந்து வருவதுமான கல்வி முறையானது மாணவர்களிடையே உத்தியோக நாட்டத்தை ஏற்படுத்தி ஒரு கண்கட்டிச் சமுதாயத்தை உருவாக்கி வந்திருக்கிறது என்றால் அது உண்மையே. பட்டங்கள், டிப்புளோமாக்கள் வழங்கி நின்ற அந்தக் கல்வி முறையானது, பல மாணவர்களைப் படகேற்றிப் பழி வாங்கவும் தவறவில்லை. மனிதன் ஒரு சமுதாயப் பிராணி என்றார் ஒரு பொருளியல் அறிஞர். சமுதாயப்பிராணியான அம்மனிதனைச் சமுதாயத்தோடு தொடர்பு படுத்துவதே கல்வியின் அரும்பணி ஆகும். ஆனால் அவ்வரும் பணியைத் துரும்பாக நினைத்துச் சிதற அடித்தது அக்கல்விமுறை. இத்தகைய குறைபாடுகளை முற்றும் களைந்த ஒரு கல்விமுறையை மாணவர்கள் இப்பொழுது கற்று வருகிறார்கள். தொழிற்படிப்பை முடித்து வெளிப்படும் ஒவ்வொருவனும் செயன் முறையிலீடுபட அது வழிவகுக்கிறது. மாணவ சமுதாயத்தை மக்கட் சமுதாயத்துடன் இணைக்கும் பாலமாக அது திகழ்கிறது. எனவே கூட்டுறவு சம்பந்தமான அக்கல்விமுறை நாட்டுயர்வை நோக்கி நடைபோடும் என்பதில் ஐயமில்லை. அதனாலேயே சமூகவியல் என்னும் கல்விக்கு அன்று தொட்டு இன்றுவரை தனித்துவம் கொடுத்துப் பயிற்றப்படுகிறது.

கூட்டுறவு இயக்கங்கள் மூலம் இன்று நாட்டின் பல பாகங்களும் நலங்கொழித்து விளங்குகின்றன. ஆனால் சில பாகங்கள் பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் சிறுமையுற்று விளங்குகின்றன. காரணம் அப்பகுதிகளில் கூட்டுறவு இயக்கம் குறைவாகவே செயற்படுத்தப் பட்டிருக்கின்றது.

எனது தொகுதியைப் பொறுத்த மட்டில் எட்டிசையும் கடல்வளங்கள்,

இதுபோல் தெங்கும், பனை யும் நன்குசெழித்தோங்கும் சிற்றூர்கள் பலவுள.

குடிசைக் கைத்தொழில் கூடியதோர் தொகுதி எம் தொகுதி. இருந் தும் இன்னும் பல இயக் கங்களை ஏற்படுத்த ஏதுக் கள் பலவுண்டு. கடலட் டை, சங்கு, நண்டு, கடற் பாசி, கருவாடு போன்ற ஏற்றுமதி வளங்கள் நிறைந்ததெங்கள் தீவகம். இருந்தும் கடலட்டை, கரு வாடு பதனிட சிறந்தவகை யில் தொழிற்சாலைகள் அமைக்கப்படவில்லை. ஏற் றுமதி நிறுவனங்களெதுவு மில்லை. கடற்றொழிலாளர் கட்கு கடன் வசதி, காப் புறுதி ஏற்படுத்தின் அதிக இலாபம் பெறலாம். தென் னங்கள், பனங்கள் கொண்டு சீனி தயாரிக் கலாம். சீவற்றொழில் கூட் டுத்தாபனங்களை ஏற் படுத்தி கூடிய இலாபம் பெறலாம். பனையதன் சிராம்பு கொண்டு தீக்குச்சி தயாரிக்கலாம். இப்படிச் செய்வதால் எண்ணற்ற இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி நாட்டிலே இணையற்ற சேவை செய்யலாம்.

இலங்கையை எதிர் நோக்கிய எண்ணற்ற பொரு ளாதாரப் பிரச்சினைகள் இவ்வியக்கங்களால் களையப் பட்டுவிட்டன. இருந்தும் இன்னும் சில பிரச்சினைகள் ஈடுசெய்யப்படாமலிருக்கின் றன. சனத்தொகைப்பெருக் கத்தாற் சதிராடும் வேலை யின்மை அவற்றுள் ஒன்று. கூட்டுறவு இயக்கங்கள் மூலம் இதை நிவர்த்தி செய்ய வேண்டின் கிராமங்கள் தோறும் சிறு சிறு கைத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். சிறந்த பல வச திகளைச் செயற்படுத்திக் கொடுக்க வேண்டும். இளை ஞர்களே எதிர்கால நாட் டின் தூண்கள். இலங்கை யெங்கணும் இளைஞர் விவ சாயத்திட்டங்களை ஏற் படுத்தி ஒளிமயமான எதிர் காலத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். விடிவு காண வியர்வை சிந்தும் அவ்விளைஞர்களின் குடி யேற்றத் திட்டங்களுக்கு ஏற்ற பலவசதிகளையும் செய்து கொடுத்தல் வேண் டும். போக்கு வரவு, வைத் தியம், பிரதான சந்தை போன்றவை அவர்களுக்கு அவசியம். கடன் வசதி களைக் குறைந்த வட்டி யுடன் வழங்கவேண்டும். சேமிப்புத்திட்டம், பயிர் காப்புறுதித்திட்டம் போன் றவற்றைச் செயற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

இன்று இறக்குமதி செய்யப்பட்டு வரும் எத்தனையோ உணவுப் பொருள்களை இலங்கையிலே உற்பத்தி செய்யலாம். ஆகவே அவ்வுணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதைத் தடைசெய்ய வேண்டும். ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதைக் கூட்டுறவு இயக்கங்கள் மூலம் ஈடுசெய்ய வேண்டுமானல் கைத்தொழில் துறையிலும், கமத்தொழில் துறையிலும், கடற்றொழில்துறையிலும் அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். சாதி, மத பேதங்களை மறந்து சலியாதுழைக்க வேண்டும்.

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகின்றன. இலங்கையில் மிகத்திறம்பட துணி நெய்யக் கூடியதாய் இருந்தும், நெய்தல் விரிவாக்கப்படாமைக்கு முக்கிய காரணம் சந்தைப்படுத்தலில் உள்ள கடினமும், வெளிநாட்டு துணிகளின் தரங்களோடு போட்டிபோட இயலாமையும் ஆகும் எனலாம். எனவே அரசினரைக் கொண்டு இறக்குமதியாகும் துணிகளை நிறுத்திவிட்டுக் கூட்டுறவு அடிப்படையில் மின்தறி ஆலைகளையும், சாதாரண நெசவாலைகளையும் நிறுவி, தரமான துணிகளை நெய்து சந்தைப்படுத்தலாம்.

இதைவிட கூட்டுறவு இயக்கம் விவசாயம் செய்வோருக்கும், மீன்பிடிப்போருக்கும் பலவிதங்களில் உதவலாம். விவசாயிகளுக்கு நல்லவிதைகள், கன்றுகள், தானியங்கள், நவீன கருவிகள், சிறந்த உரங்கள் என்பவற்றை வழங்கி விளைவைப்பெருக்குவதோடு அவற்றைச் சந்தைப்படுத்தி விவசாயிகளினதும் அரசினதும் வருமானத்தையும், பொருளாதார நிலையையும் உயர்த்தலாம். மீன்பிடிப்போருக்கும் இவ்வித பிற உதவிகள் புரிந்து. மேலதிக மீன்களைப் பதனிட்டு பிற பிரதேசங்களுக்கும் அனுப்பி சந்தைப்படுத்தி, மீன்பிடிங்போரது வருமானத்தைக் கூட்டலாம். அதோடு அரசுக்கும், ஏற்றுமதி செய்ய சிறந்த பதனிட்ட மீன்களை அளித்தால் அதன் மூலம் அரசாங்கம் அந்நிய செலாவணியைச் சேமிக்கலாம்.

இவ்வாறு கூட்டுறவு இயக்கம் பலவகைகளிலும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க உதவலாம்.

கீழ்ப்பிரிவில் முதலாவது பரிசு பெற்ற கட்டுரை

# நான் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்தால் சங்கத்தின் வளர்ச்சிக்கு எவ்வாறு பணிபுரிவேன்

—இராசரத்தினம் பாலபாஸ்கரன்
(மகாஜனக் கல்லூரி)

ஆரம்ப காலத்தில் வாழ்ந்த மனிதனுக்கும், தண்மதிக்குச் செல்லும் இன்றைய மனிதனுக்குமிடையேயுள்ள வளர்ச்சி பெரிது. தேவைப் பொருள்களின் பெருக்கமும், அறிவியல் வளர்ச்சியும் இணைந்தபோது பல்லாயிரக்கணக்கான தொழில்கள் பிறந்தன. இத்தொழில்கள் பலப் பலவாகப் பெருக்கமடைந்த நிலையில் இன்றைய மனிதன் செம்மையுற வாழ விரும்பினால் அவன் கூட்டுறவுச் சங்கத்தையே நாட வேண்டியவனாகின்றான்.

கூட்டுறவு பயன் கொடுக்க வேண்டுமானால் அதில் பங்கு கொள்ளுவோர் ஒழுக்கம், ஒற்றுமை, ஆகிய பண்பு உடையவராக விளங்க வேண்டும். இல்லாவிடில் கூட்டுறவுச் சங்கங்கள் நமக்குப் பயனைக் கொடுக்க மாட்டா. ஒழுங்கற்றவையாக இருந்தால் இது சீரழிந்து விடும். கூட்டுறவுச் சங்கத்தில் பதவி வகிப்போர் பொறுப்புணர்ச்சி, நேர்மை, கடமை உடையயவராக அதன் வளர்ச்சிக்குப் பாடுபடுபவராக இருத்தல் வேண்டும். அப்போதுதான் அச்சங்கத்தின் மூலம் நன்மைகளை அடையமுடியும். எனவேதான், நான் ஒரு தலைவரானால் அச்சங்கம் எந்தெந்த வகையில் மக்களுக்கு உதவமுடியுமோ அந்த வகையில் மக்களுக்குதவி செய்ய அதை வழிநடாத்துவேன். அச்சங்கத்தின் பொதுக் கூட்டம், நிருவாகக் கூட்டம் என்பனவற்றை ஒழுங்காக நடக்கச் செய்வேன். சங்க அங்கத்தவர் தொகையைக் கூட்டுவதோடு மூலதனத்தைப் பெருக்க முயல்வேன். அச்

சங்கத்தின் நிதிநிலை, இலாப நட்டம் என்பவற்றை ஒழுங்காக நடக்கச் செய்வேன். சங்க அங்கத்தவர் தொகையைக் கூட்டுவதோடு மூலதனத்தைப் பெருக்க முயல்வேன். அவ்வப்போது சங்க வரவு செலவுத் திட்டவிபரத்தைப் பெற்று மக்களுக்கு வெளியிடுவேன். உத்தியோகத்தர்களின் நலன்களையும் பாதுகாப்பேன்.

அரசாங்கம் கூட்டுறவுச் சங்கத்திற்கு அளிக்கும் உதவியைச் சரியான முறையில் பயன்படுத்த முயல்வேன். கூட்டுறவு வாரம், கூட்டுறவு விழா ஆகியவற்றை நல்லமுறையில் நடாத்துவேன். கூட்டுறவு மூலம் மக்கள் அடையக் கூடிய நன்மைகளை மக்கள் உணர வழிசெய்வேன். சங்கத்தின்மூலம் பன்னவேலை, சித்திரவேலை, மட்பாண்டவேலை, விளையாட்டுப் பொம்மை வேலை செய்தல் முதலிய சிறுகைத் தொழில்களை வளர்க்க முயல்வேன். இவற்றால் கிடைக்கும் ஊதியத்தை மக்களுக்கு ஆண்டுதோறும் பங்கிட்டுக் கொடுப்பேன். சங்க ஊழியர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் தரத்தை நாட்டுவேன். ஒழுங்கற்ற திருவாகத்திற்கும், தலையீடுகளுக்கும், ஊழல்களுக்கும் இடம் இல்லாது செய்து சங்கத்தைப் புனிதமான பயனுள்ள இயக்கமாக வைத்திருப்பேன்.

கிராமங்களிலே வாழும் விவசாயப்பெருமக்கள் உழைப்பினை உயிர் மூச்சாகக் கொண்டு, உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். அவர்கள் நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த உழைத்த உழைப்பின் பூரண பயனை அனுபவிக்க விடாமல் சில சக்திகள் தடைசெய்கின்றன. விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் நேரடித் தொடர்பு ஏற்படாவண்ணம் அவர்களுக்கிடையே தரகர் தோன்றுகின்றனர். அன்றியும் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தோர், விளைவைக் குறைந்த விலைக்குப் பெற்றுக் கொள்ளுகின்றனர். இவ்வித தீயசக்திகளை முறியடித்து விவசாயிகளுக்குக் கடனுதவி விளைவை நியாய விலை கொடுத்து வாங்கி ஆதரவு அளிப்பேன். நாட்டு மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தையும், தேவைக்கேற்ற வகையில் கடன் பெறும் பழக்கத்தையும் ஐக்கிய நாணய சங்கங்கள் வாயிலாக உண்டாக்க

நான் மிகவும்பாடுபடுவேன். சனநாயகமென்னும் சொல் இன்று ஆட்சிமுறையைக் குறிப்பிடுவதாயினும் அதை ஒரு நன்னெறிச் சார்புள்ள வாழ்க்கை முறை என்றே கொண்டு பாமர மக்களி டையே சனநாயக உணர் வைப் பரப்பப் பணியாற் றுவேன். தொழிலாளர் களிடையே தாபன ரீதி யான ஒற்றுமை ஏற்படும் போது அவர்களது தொ ழில் விருத்தியடைகின்றது. உற்பத்திப் பெருக்கத் தோடு இடையீடு எதுவு மின்றி அவர்கள் பொருள் களை விற்கவும் உதவி புரி வேன். ஒவ்வொரு கிராம மும் தனது தேவைப் பொருட்களிலே தன்னி றைவு பெற்று காந்தியண் ணல் கனவுகண்ட இராம ராச்சியம் மலரப் பாடுபடு வேன்.

கூட்டுறவுச் சங்கம் சமு தாய மக்களது மனவொரு மைப்பாட்டிலே முளைவிட்டு சனநாயக தருமம் என்னும் நீருண்டு செழித்து வளர் வது. சுயநல மனப்பாங்கும் சுரண்டும் எண்ணமும் கொண்ட தீயவர்கள் இதன் நிருவாகப் பொறுப்பைக் கைப்பற்றிக் கொண்டால் கூட்டுறவுச் சங்கம் நிச்சய மாக இழிநிலையடைந்து விடும். நாட்டு மக்களுக்குச் சொல்லொணாத்துன்பமும், நட்டமும் விளையும். ஆத லால், மக்களே கூட்டுற வுச் சங்கத்தின் அமைப் பாளராக விளங்குவதால் நிருவாகிகளைத் தெரிவதும் நெறிதவறி அவர்களை நீக் குவதும் அவர்களது கைகளி லே இருக்கின்றன. இந்தச் சக்தி தக்கமுறையில் வழி நடத்தப்படுமானால் கூட்டு றவுச் சங்கத்திலே ஊழல், இலஞ்சம், சுரண்டல் முத லிய தீவினைகள் தலைகாட் டா.

---

## வாழ்வு

எல்லாப் பெருக்கமும் வாழ்வே. எல்லாச் சுருக்கமும் சாவே. எல்லா அன்பும் பெருக்கமே. எல்லாச் சுயநலமும் சுருக்கமே. ஆதலின் வாழ்வைப்பற்றிய ஒரே விதி அன்பே. அன்புடை யவனே வாழ்பவன்; சுயநலமுடையவன் செத்துக்கொண் டிருக்கிறான்.

—சுவாமி விவேகானந்தர்.

# ஸ்ரீலங்கா தேசீய கூட்டுறவுச் சபை

## பரந்தன் மாவட்டக் குழு ஆண்டறிக்கை

பரந்தன் மாவட்டக்குழு கடந்த ஆண்டறிக்கையை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றது. முதலாவது வருடாந்த மாவட்டக் கூட்டத்திற்குப் பின்பு ஆறுமாவட்டக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

இம்மாவட்டக்குழு உறுப்பினர்கள் வருமாறு :

1 திரு. ம. ஸ்ரீகாந்தா (தலைவர்) வவுனிக்குளம் ப. நோ. கூ. சங்கம்

2 ,, ஏ. ஜி. இராஜசூரியர் (உபதலைவர்) பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்

3 ,, எம். எம். மக்பூல் கராச்சிவடக்கு ப. நோ. கூ. சங்கம்

4 ,, எஸ். பொன்னையா கராச்சிதெற்கு ப. நோ. கூ. சங்கம்

5 ,, பொ. சிற்றம்பலம் விஸ்வமடு படித்த வாலிபர் விவசாய கூ. சங்கம்

6 பண்டிதர் க. யோ. ஆசிநாதர் அருணோதய யௌவன ஐ. நா. சங்கம்

7 திரு. கே. செல்லையா (நியமனம்) கூ. அபிவிருத்தி உத்தியோகத்தர்

8 ,, எஸ். கனகரத்தினம் (நியமனம்) அதிபர், குமரபுரம் மகாவித்தியாலயம்

9 செல்வி வி. துரைசாமி (நியமனம்) அபிவிருத்தி உதவியாளர், கிளிநொச்சி

இப்பிரிவிலுள்ள சங்கங்களின் மொத்தத்தொகை: 77

| | | |
|---|---|---|
| 1 | ஆரம்ப ப. நோ. கூ. சங்கம் | 6 |
| 2 | ஐ. நா. சங்கம் | 52 |
| 3 | ஐ. நா. ச. சமாசம் | 3 |
| 4 | கடற்றொழிலாளர் கூ. ச. | 2 |
| 5 | படித்தவாலிபர் கூ. ச. | 2 |
| 6 | கள் உற்பத்தி விற்பனைச் ச. | 3 |
| 7 | புகையிலை உற்பத்திச் சங்கம் | 2 |

| | | |
|---|---|---|
| 8 | பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2 |
| 9 | தொழிலாளர் கூ. ச. | 2 |
| 10 | சமுகநலம்புரி கூ. ச. | 2 |
| 11 | நெச்சுத் தொழில் கூ. ச. | 1 |

ப. நோ. கூ. சங்க நெறியாளருக்கும், பணியாளர்களுக்கும் 15 கருத்தரங்குகளும், பயிற்சி வகுப்புகளும் நடாத்தப்பட்டன. விபரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | துணுக்காய் ப. நோ. கூ. ச. | 3 |
| 2 | கராச்சி வடக்கு ப. நோ. கூ. ச. | 2 |
| 3 | கராச்சி தெற்கு ப. நோ. கூ. ச. | 3 |
| 4 | வவுனிக்குளம் ப. நோ. கூ. ச. | 3 |
| 5 | பூநகரி ப. நோ. கூ. ச. | 2 |
| 6 | பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. ச. | 2 |

ப. நோ. கூ. சங்க கிளைக் குழு உறுப்பினருக்கு 9 கருத்தரங்கு நடாத்தப்பட்டன. தலைமைக்காரியாலய பணியாளருக்கும், கிளை முகாமையாளர்களுக்கும் 6 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. நாச்சிக்குடா கடற்றொழிலாளர் கூ. சங்கத்திற்கும், இரணைதீவு கடற்றொழிலாளர் கூ. சங்கத்திற்கும் 2 பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன. கிளிநொச்சி கள் உற்பத்தியாளர் கூ. சங்கத்தில் ஒரு கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

''புதிய கணக்கு வைக்கும் முறையும் முகாமையும்'' குறித்து பரந்தன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் அலுவலகத்தில் 3 நாட்கள் தொடர்ந்து ஒரு மாவட்ட கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு பரந்தன் கூ. ஆணையாளர் திரு. வி. எஸ். இராமநாதன் தலைமை வகித்தார்.

பதில் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. ரி. டி. ஜே. விதாரண (எண்பார்வை) கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்தினார். கூ. ஆ. உ. ஆணையாளர் (முகாமை) திரு. வியனகே காரியாலயப் பரிசோதகர் திரு. ஹெக்டர் சில்வா ஆகியோர் உரையாற்றினர். சிரேஷ்ட கூ. ஆ. உ. ஆணையாளர் திரு. ஜே எஸ். எம். டி. சில்வா, கூட்டுறவு

ஆக்க உதவி ஆணையாளர் (எண்பார்வை) திரு. வி. மகேந்திரன், கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தரும் சங்கப் பிரதிநிதிகளும் சமுகமளித்திருந்தனர்.

பரந்தன் கூ. உ. ஆ. ஆணையாளர் திரு. வி. எஸ். இராமநாதன் நன்றி கூறிய பின்பு கூட்டுறவு உத்தியோகத்தர்களின் சார்பாக காரியாலயப் பரிசோதகர் திரு. எஸ். மார்ட்டினும் தேசிய கூட்டுறவுச் சபையின் சார்பில் பரந்தன் கிளைச் செயலாளர் திரு. பொ. செல்வரத்தினமும், சங்கப் பணியாளர் சார்பில் பூநகரி ப. நோ. கூ. சங்கப் பொது முகாமையாளர் திரு. கே. விஸ்வலிங்கமும் நன்றி கூறினார்கள்.

"நிருவாகமும் கிராமிய வங்கியமைப்பும்" என்னும் விடயம் குறித்து பரந்தன் கூ. உ. ஆ. ஆணையாளர் அலுவலகத்தில் ஒரு கருத்தரங்கு கூ. உ. ஆ. ஆணையாளர் (எண்பார்வை) திரு. வி. மகேந்திரன் தலைமையில் நடைபெறறது. இக்கருத்தரங்கில் கூ. ஆ. உ. ஆணையாளர் (முகாமை) திரு. வியனகே உரையாற்றினார். தேசிய கூட்டுறவுச் சபை பரந்தன் கிளைச் செயலாளர் பொ. செல்வரத்தினம் நன்றி கூறினார்.

## பிரசாரக் கூட்டமும், போதனா வகுப்பும்

பரந்தன் பகுதியில் ஒரு போதனா வகுப்பும் 3 மகாநாடுகளும் நடைபெற்றன. கிளிநொச்சி ஈஸ்வரன் படமாளிகையில் உணவு உற்பத்தி குறித்து ப. நோ. கூ. சங்கப் பிரதிநிதிகளின் இரு மகாநாடுகள் நடைபெற்றன. இம் மகாநாடுகளில் அரசியல் அதிகாரி திரு. சி. அருளம்பலம் (பா. உ.) மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், பரந்தன் கூ. உ. ஆ. ஆணையாளர் திரு. வி. எஸ். இராமநாதன், உணவு உற்பத்தி தொடர்புள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் முதலியோரும் கலந்து கொண்டனர்.

பரந்தன் கூ. உ. ஆ. ஆணையாளர் அலுவலகத்தில் விவசாய அபிவிருத்தி சம்பந்தமாக கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர், பொது முகாமையாளர், கிராமிய வங்கி முகாமையாளர் முதலியோருக்கு ஒரு மகாநாடு நடாத்தப்பட்டது. பூநகரி ப. நோ. கூ. சங்கமும் உணவு உற்பத்தி குறித்து உறுப்பினர்களுக்கு ஒரு மகாநாட்டை நடாத்தியுள்ளது.

பரந்தன் கூ. உ. ஆ. ஆணையாளர் அலுவலகத்தில் தேசீய கூட்டுறவுச் சபை பரந்தன் மாவட்டக் குழு உறுப்பினருக்கும், கூட்டுறவுத் திணைக்கள பிரதிநிதிகளுக்கும் ஒரு போதனை வகுப்பினை நடாத்தியுள்ளது. குமரபுரம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி மகாவித்தியாலயம், பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம் கராச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் துணுக்காய் ப. நோ. கூ. சங்கம் ஆகியவற்றில் 5 பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றன.

### விஸ்வமடுக்குள விஸ்தரிப்பும் படித்த வாலிபர் குடியேற்றமும்

விவசாய வளர்ச்சிக்கு விஸ்வமடுக்குளத்தினை விஸ்தரித்து உதவ வேண்டுமென நீர்ப்பாசன நெடுஞ்சாலை அமைச்சருக்கு நாம் எழுதிய கடிதத்திற்கு இவ்வாண்டு அவ்விடயம் குறித்து நடபடிக்கை எடுப்பதாக அவரிடமிருந்து பதில் கிடைத்திருக்கிறது.

படித்த வாலிபர்களைக் குடியேற்றி விவசாயம் மூலம் அவர்கள் புதுவாழ்வில் மறுமலர்ச்சி பெறுவதற்கு நாம் நல்வழிகாட்ட முயன்று வருகின்றோம். இது குறித்து கூ. உ. ஆ. ஆணையாளர் திரு. வி. எஸ். இராமநாதன், திரு. கே செல்லையா, பண்டிதர் ஆசிநாதர், செல்வி துரைசாமி ஆகியோர் கொண்ட ஒரு உப குழு தெரிவு செய்யப்பட்டது. இக்குழுவின் அழைப்பாளராக செல்வி வி. துரைசாமி நியமிக்கப்பட்டுள்ளனர்.

### நெல் அறுவடை விழா

துணுக்காய் பகுதியிலும், கிளிநொச்சிப் பகுதியிலும் பூநகரிப்பகுதியிலும் நெல் அறுவடை விழா சிறப்பாக நடைபெற்றது. கூட்டுறவாளர்களும், கமக்காரர்களும் இவ்விழாக்களில் கலந்து கொண்டனர்.

### பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள்

இத்திட்டங்கள் ஆறு திட்டங்களாகக் கீழ் வரும் சங்கங்களால் எமது உதவியுடன் சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் உணவு அபிவிருத்தித்திட்டம் வெற்றி பெற இவை உதவிவருவதோடு வேலையில்லாப்பிரச்சினை தீர்வதற்கும் இயன்ற அளவு உதவியளிக்கின்றன.

**பூநகரி ப. நோ. கூ. சங்கம்**

இச்சங்கத்தின் மேற்பார்வையிலே மேற்கூறப்பட்ட திட்டச் செயற்பாடுகள், நல்லூர், முற்கொம்பன், பல்லவராயன் கட்டு, ஆலங்கேணி, திக்குவில் ஆகிய குக்கிராமங்களில் தீவிரமாக இயங்கி வருகின்றது. இக்கிராமங்களில் குறிப்பாக மிளகாய் உருளைக்கிழங்கு, வெங்காயம் முதலிய உப உணவுப் பயிர்ச் செய்கையில் வாலிபர்களை ஊக்கமுடன் ஈடுபடச் செய்து பண உதவி வழங்கப்பட்டதோடு 12 நீர் இறைக்கும் இயந்திரங்களும் அளிக்கப்பட்டன.

**கராச்சி தெற்குப் ப. நோ. கூ. சங்கம்**

அக்கராயனிலும், கல்மடுவிலும் கமத்தொழிலை வளப்படுத்துவதற்கு அரசாங்கம் நிதியுதவியினை அளிக்கவிருக்கின்றது. கல்மடுவில் உப உணவுப் பயிர்ச் செய்கையை, குறிப்பாக மிளகாய் பயிரிடுவதற்கு 40 ஏக்கர் முடிக்குரிய காணியை 36 உறுப்பினர்களுக்குத் தனித்தனியே பகிர்ந்து அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், கூட்டுப்பண்ணை விவசாயத்திட்டத்தில் 3 விவசாயிகளுக்கு ஒரு நீர் இறைக்கும் இயந்திரம் என்ற முறையிலே 20 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படவிருக்கின்றன. கூட்டுப்பண்ணை விவசாயத்தினை அக்கராயன் குளத்திலும், கனகராயன் ஆறு திட்டத்திலும் தொடங்குவதற்கு வாலிபர்களைச் சேர்ப்பதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**கராச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்**

தையல் பயிற்சி நிலையத்தினை இச்சங்கம் நிறுவி பெண்களுக்கு தையல் பயிற்சி அளித்து வருகின்றது. இந்நிலையத்திலே தயாரிக்கப்படும் உடைகளை பரந்தன் பகுதியிலுள்ள ப. நோ. கூ. சங்கங்கள் பெருமளவில் விற்பனை செய்து வருகின்றன. இவ்வுடைகளின் தரம் மிகச் சிறந்ததாக இருப்பதினாலும் நியாயமான விலையில் இருப்பதினாலும் பொது மக்கள் பெரு விருப்புடன் ஆதரவளித்து வருகின்றனர். உழவு இயந்திரங்களின் உதிரிப் பாகங்களை விற்பனை செய்து வரும் இச்சங்கம் இந்த இயந்திரங்களைத் திருத்துவதற்கு ஒரு நிலை

யத்தினை நிறுவி செயற்படுத்தி வருகின்றது.

**வவுனிக்குளம்**

**ப. நோ. கூ. சங்கம்**

செங்கல் தொழிற்சாலையொன்றினை இச்சங்கம் சிறந்த முறையில் நடாத்தி வருகின்றது. இப்போது சீமேந்தின் விலை அதிகரித்துள்ளதால் இன்று செங்கல்லை பலர் உபயோகிக்கத் தொடங்கியுள்ளனர். எதிர்காலத்தில் கட்டிடங்களுக்கு செங்கல் பலராலும் உபயோகிக்கப்படும் நிலை ஏற்பட்டு இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் செங்கற்கள் பெருமளவில் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கிறோம்.

**துணுக்காய்**

**ப. நோ. கூ. சங்கம்**

இச்சங்கப் பகுதியிலுள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயிகளாக இருப்பினும் கைத்தொழிலிலும் அதிக முயற்சி எடுத்து வருகின்றனர். எனவே அவர்கள் சிறு கைத்தொழிலாக பெருமளவில் பாய்களை புல்லினால் இழைத்து வருகின்றனர். இக் கைத்தொழிலை மேலும் ஊக்குவிக்கவும் பாய்களை விற்பதற்கும் இச் சங்கம் கல்விழான் பகுதியில் ஒரு நிறுவனத்தை நிறுவுவதற்கு திட்டமிட்டுள்ளது. தென்னியம் குளங் பகுதியிலுள்ள முடிக்குரிய காணியில் பருத்திப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதற்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

**பச்சிலைப்பள்ளி**

**ப. நோ. கூ. சங்கம்**

தனிப்பட்ட முறையில் தர்மக் கேணியில் இயங்கி வந்த ஒரு தென்னந்தோட்டத்தை அரசாங்கம் சுவீகரித்து அதில் கூட்டுப்பண்ணை விவசாயத்தை மேற்கொள்வதற்கு இச்சங்கத்திடம் சகல பொறுப்புக்களையும் அளித்துள்ளது. இதற்காக உத்தியோக பூர்வமாக பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்தில் அண்மையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் காணி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கொப்பேகடுவ கலந்து கொண்டார். குறித்த இத் தென்னந் தோட்டத்தின் கூட்டுப் பண்ணை விவசாயத்தினை பரீட்சார்த்தமாகச் செய்வதற்கு படித்து வேலையற்றிருக்கும் 25 வாலிபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கர் வீதம் கொடுக்க வேண்டுமென அரசு திட்டமிட்டுள்ளது.

## அபிவிருத்தித் திட்டம்:- விசை தெளி கருவி

கடந்த கால போகத்தில் நெற்பயிர்ச் செய்கையில் பலர் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர். நெற்பயிர்களுக்கு வழக்கமாகப் பூச்சிகளால் ஏற்படும் அழிவினைத் தடுக்கும் பொருட்டு விசைத் தெளிகருவிகள் அரசாங்க நன்கொடைப் பணமூலம் சங்கங்களுக்கு வழங்கப்பட்டன. இவற்றைப் பெற்ற சங்கங்களின் விபரம் வருமாறு''

பூநகரி ப. நோ. கூ. சங்கம் 16

கராச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் 10

கராச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் 10

கமக்காரர் தமது சங்கங்களினூடாக எளிதாக இக் கருவிகளைப் பெறுவதற்கு அரசாங்க அதிபரின் உதவியுடன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. வி. எஸ். இராமநாதன் உதவிபுரிந்துள்ளார்.

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

பரந்தன் பகுதியில் 2 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவையாவன: பூநகரி கடற்றொழிலாளர் கூ. சங்கம், பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம். பூநகரி கூட்டுறவுச் சங்கம். நாச்சிக்குடாவிலும், இரணைதீவிலும் உள்ள கிளைகள் மூலம் அட்டைத்தொழிலில் மிகவும் குறிப்பிடத் தக்க லாபத்தினைப் பெற்று அந்நிய செலாவணியைச் சம்பாதித்து வருகின்றது. இச் சங்கத்தில் 212 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். 6 இயந்திரப் படகுகளை வைத்திருக்கும் இச் சங்கத்திற்கு மீன் பிடித்திணைக்களம் ரூபா 190,776/47 கடனுக வழங்கியுள்ளது. பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 174 பேர் அங்கம் வகிக்கின்றனர். ஒரு வள்ளத்தினை உடைய இச்சங்கத்திற்கு ரூபா 7269/35 கடனுக வழங்கப்பட்டுள்ளது.

## பரந்தன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் பகுதியில் வழங்கப்பட்ட விவசாயககடன்-நெல் 1972/73

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட கடன்: | ரூபா | 1,267,443-24 |
| அறவிட்ட தொகை: | ரூபா | 802,194-10 |
| மிகுதி: | ரூபா | 465,249-14 |

## நெல் கடன்: 1973/74

வழங்கப்பட்ட கடன்: ரூபா 3,849,894-29

## உப உணவுத்திட்டக்கடன்: மிளகாய்

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட கடன்: | ரூபா | 178,631-54 |
| அறவிட்டது: | ரூபா | 39,337-76 |

### கூட்டுறவுத் தின விழா

கூட்டுறவுத் தின விழாவை யொட்டி பாடசாலைகளுக்கிடையே பேச்சு, தனிப் பாடல், கூட்டுப்பாடல், நடனம், நாடகம் ஆகியவற்றில் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளாக மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் வெவ்வேறுகப் போட்டிகள் நடாத்தப்பட்டன. கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் பிரிவில் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே இப் போட்டிகளுடன் வில்லுப் பாட்டு, அட்டை வாக்கியம் புனைதல், விவசாய அறிவு ஆகியவற்றில் போட்டிகள் நடாத்தப்பட்டன. இப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசில்களை சங்கங்கள் வழங்கின. சங்கங்கள் பொதுக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் முதலியவற்ருல் இவ்விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடின.

### நன்றி.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் பரந்தன் மாவட்டக்குழு கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பாக எடுத்த எல்லா முயற்சிகளிலும் பரந்தன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. வி. எஸ். இராமநாதன் வழிகாட்டியாகவும் உச்சாகம் ஊட்டுபவராகவும் ஆற்றி வரும் அரிய சேவைகள் குறிப்பிடத் தக்கவையாகும். விசேடமாக கூட்டுறவாளர்களும், கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் பணியாளர்களும் அப்பகுதி வாழ் மக்களும் கூட்டுறவு குறித்து விளக்கங்களைப் பெறுவதற்குரிய

வாய்ப்புக்களை வகுத்து அவர்கள் கூட்டுறவால் உயர்வு காணும் நிலையினை ஏற்படுத்தியமை பாராட்டு தற்குரியது.

கூ. உ. ஆ. ஆணையாளர் (எண்பார்வை) திரு மகேந்திரன், இக்குழுவின் உறுப்பினரில் ஒருவரும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருமான திரு. கே. செல்லையா, கூட்டுறவுக் காரியாலயப் பரிசோதகர்கள், கூட்டுறவு உத்தியோகத்தர்கள், சங்கங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ம. ஸ்ரீகாந்த (தலைவர்)
ஸ்ரீ. ல. தே. கூ. சபை,
பரந்தன்

பொ. செல்வரத்தினம்
(செயலாளர்)
ஸ்ரீ ல. தே. கூ. சபை.
பரந்தன்.

# பேச்சும் மௌனமும்

வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் கடவுளைக் காண்பதற்கு முன்புதான். ஆண்டவனைக் கண்டதும் பேச்செல்லாம் நின்று போய் விடும். சந்தைக்கு வெளியிலே பெரிய இரைச்சல் கேட்கும். அது என்ன சத்தம் என்று கேட்டால் ''சந்தைக் கூச்சல்'' என்போம். ஆனால் சந்தைக்குள்ளே பிரவேசித்து விட்டால் இரைச்சல் காதில்படாது. பண்டத்தின் விலை கேட்பதிலும் வியாபாரம் முடிப்பதிலும் கவனம் செலுத்துகின்றோம். இப்படியேதான் பக்தியும். தொலைவில் நிற்கும்போது வாதங்களின் இரைச்சல் அதிகமாக இருக்கும். பகவானை அண்டிப்பக்கத்தில் நெருங்கியதும் வாதங்களின் சத்தம் அடங்கிப் பகவானிடம் லயித்து விடுவோம். பணியாரச் சட்டியில் நெய்யில் அப்பம் பொரியும் போது அதிகம் சத்தம் உண்டாகும். அப்பம் பக்குவமானதும் சத்தம் அடங்கிப் போகும். பக்தி செய்கிறவர்கள் முதலில் மிகவும் பேசுவார்கள். பிறகு பேச்சு அடங்கிப் போய் ஞானம் முற்றும்.

— ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்

# ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபை

## யாழ் மாவட்டக் குழு ஆண்டறிக்கை

யாழ் மாவட்டக்குழு கடந்த ஆண்டறிக்கையை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றது. முதல் வருடாந்த பொதுக்கூட்டத்திற்குப் பின்பு ஆறு மாவட்டக்குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

கூட்டுறவு அறிவும், கூட்டுறவு வாழ்வும் மக்களிடையே வளர்வதற்கு இக்குழு பல்வேறு துறைகளிலும் சிறந்த சேவை ஆற்றியுள்ளது.

### யாழ் மாவட்டக்குழு உறுப்பினர்

| பெயர் | சங்கம் |
|---|---|
| 1. திரு. சு. கந்தையா (தலைவர்) | மாதகல் வடமேற்கு ஐ. நா. சங்கம் |
| 2. திரு. ந. த: சிவஞானம் உப-தலைவர் | வடபகுதி கூ: வி, உ. சங்கங்களின் சமாசம் |
| 3. திரு இ. இராசரத்தினம் | மானிப்பாய் கோயிற் பற்று ப. நோ. கூ. சங்கம் |
| 4. திரு. க. இ. குமாரசுவாமி | வலிகிழக்கு (தென் பகுதி) ப. நோ. கூ. சங்கம் |
| 5. திரு: பொ. நாகலிங்கம் | சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் |
| 6. திரு. வை. இராசசுந்தரம் | சங்கானை ப. நோ. கூ. சங்கம் |
| 7. திரு. கே. பத்மநாதன் | காமாட்சி அம்பாள் கைத்தொழில் கூ. சங்கம் நீர்வேலி |
| 8. திரு. இ. சபாலிங்கம் | அதிபர் யாழ் இந்துக் கல்லூரி (நியமனம்) |
| 9. திரு. கே. நல்லைநாதன் | உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (நியமனம்) |
| 10. திரு. வி. சு. சண்முகம் | (கூட்டுறவு காரியாலயப் பரிசோதகர் (நியமனம்) |

**உறுப்புரிமை வகிக்கும் சங்கங்களின் தொகை 64**

| | |
|---|---|
| ப. நோ. கூ. சங்கம் | 21 |
| கடற்றொழிலாளர் கூ. சங்கம் | 5 |
| பாற் பண்ணைச் சங்கம் | 1 |
| விவசாயச் சங்கங்கள் | 3 |
| புத்தக வெளியீட்டு விற்பனவுச் சங்கம் | 1 |
| சிகரெற் புகையிலை உ. விற்பனவு கூ. சங்கம் | 1 |
| கைத்தொழிற் கூ. சங்கம் | 1 |
| துறைமுகச் சேவைகள் சமாசம் | 1 |
| ஏனைய சங்கங்கள் | 30 |
| | 64 |

## கருத்தரங்குகளும் பயிற்சி வகுப்புகளும்

ப. நோ. கூ. ச. நெறியாளர் குழுவினர்களுக்கும், கிளைக்குழு உறுப்பினர்களும் 32 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு 9 கருத்தரங்குகள் பின்வரும் கடற்றொழிலாளர் சங்கங்களின் ஆதரவில் நடாத்தப்பட்டன.

| | |
|---|---|
| ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | 6 |
| பண்டத்தரிப்பு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | 1 |
| சாவகச்சேரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | 2 |

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், மீன் பிடித் திணைக்களம் மீன்பிடிக்கூட்டுத்தாபனம் ஆகியவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு 15-1-73 வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டது. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களுக்கு 17. கருத்தரங்குகளும் பயிற்சி வகுப்புகளும் நடைபெற்றன.

### பிரசாரக் கூட்டம்

கல்லூரிகள் சங்கங்கள் திருநெல்வேலி கமத்தொழில் நிலையம் ஆகியவற்றில் 8 பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றன.

### மாவட்ட கருத்தரங்கு

1973 ஆண்டு செப்டெம்பர் ஐந்தாம் திகதி தொடக்கம் எட்டாம் திகதி வரை வீரசிங்கம் மண்டபத்தில் முகாமை, கணக்கு வைக்கும் முறை குறித்து மாவட்டக் கருத்தரங்கு யாழ் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் பிரிவில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மேல், நடுமட்ட உத்தியோகத்தர்களுக்கும், கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் நடைபெற்றது.

யாழ் மாவட்டக் குழுத் தலைவர் திரு சு. கந்தையா வரவேற்புரை நிகழ்த்தி இக்கருத்தரங்கினை ஆரம்பித்து வைக்குமாறு தனது முன்னுரையில் விடுத்த அழைப்பினை ஏற்று திரு. T. D. J. விதாரண (பதில் ஆணையாளர் எண்பார்வை) இதனை தொடங்கி வைத்தார். இவரது தலைமையிலே மூன்று நாட்களும் காலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மாலை நிகழ்ச்சிகளுக்கு யாழ் கூட்டுறவு கல்லூரி அதிபர்: திரு. வி. நடராசா தலைமை தாங்கினர். திரு. ஹெக்டர் டி. சில்வா (தலைமைக்காரியாலயப் பரிசோதகர், எண்பார்வை) திரு எஸ். பி. லியனகே (கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் முகாமை) ஆகியோர் உரை நிகழ்த்தினர். கூட்டுறவு சிரேஷ்ட உதவி ஆக்கஆணையாளர் (வடபகுதி) கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் (எண்பார்வை) கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் (விரிவாக்கல்) கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் (அபிவிருத்தி) ஆகியோர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். செயலாளர் திரு. பொ. செல்வரத்தினம் நன்றி கூறினர். இருநூற்றுக்கு மேற்பட்டவர்கள் இக்கருத்தரங்கிலே தினமும் பங்கு பற்றினர்

### மகாநாடுகள்

பாவனையாளர்கள் பொருள்களைப் பெறுவதிலுள்ள பிரச்சினைகளை ஆராயும் வண்ணமும், உணவுற்பத்தி குறித்தும் விவசாய உற்பத்திச் சேவைகள் கூட்டுறவு சங்கத்தை நிறுவுவதற்கும் மூன்று மகாநாடுகள் வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டப்பட்டன. விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சேவைகள் சங்கத்தின் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதோடு, அதனை பதிவு

செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உணவு உற்பத்தியில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் ஈடுபட்டு உழைக்கும் பொருட்டும், அவற்றின் தேவைகளை அறிந்து நாம் உதவவும் நோக்குடனும் சுற்று நிருபம் மூலம் எல்லாச் சங்கங்களுக்கும் ஊக்கமளித்துள்ளோம்.

## காணியும் கூட்டுறவு நிலையமும்

வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகில் மேற்குப் புறமாக அமைந்துள்ள காணி 3-9-73 ல் மக்கள் வங்கியால் யாழ்ப்பாண தேசிய கூட்டுவுச் சபைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. இக்காணியில் கூட்டுறவுக் கல்லூரி, காட்சிச் சாலை, நூல் நிலையம் ஆகியவை அடங்கிய ஒரு கூட்டுறவு நிலையத்தை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

## கூட்டுறவுக் கல்லூரி

இக்கல்லூரியில் உயர் பிரிவு, சாதாரண பிரிவு என இரு பிரிவுகளாகப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சாதாரண பிரிவுப் பயிற்சி வருடத்திற்கு இருதடவைகளும், உயர் பிரிவு ஒரு முறையும் நடாத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு சாதாரண பிரிவில் 72 மாணவர்களும், உயர் பிரிவில் 26 மாணவர்களும் பயிற்சி பெற்றுள்ளனர். தேசிய கூட்டுறவுச் சபையினால் நடாத்தப்பட்டு வரும் தபால் மூலமமைந்த பயிற்சி நெறிகளைப் பயின்று வரும் மாணவர்களுக்கு மாதத்தில் இரு முறை இக் கல்லூரியில் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

அறிஞர்களது சிறப்புச் சொற்பொழிவுகள் அவ்வப் போது இங்கு நடாத்தப் பட்டுவருவதுடன், சரஸ்வதி பூசை வழக்கமாக விசேட வைபவமாக அனுஷ்டிக்கப் பட்டுகின்றது. இக்கல்லூரியில் சிறந்த ஓர் நூல் நிலையம், குறிப்பிடத்தக்க வகையில் கூட்டுறவு சம்பந்தமான நூல்களைக் கொண்டதாக இயங்கி வருகிறது. இந் நூல் நிலையத்தின் ஒரு பகுதி மதிபாலசிங்கம் அவர்களது ஞாபகார்த்தமாக விளங்குகிறது.

### கூட்டுறவுத்தின விழா

கூட்டுறவுத்தின விழாவையொட்டி பாடசாலைகளுக்கிடையே பேச்சு, தனிப்பாடல், கூட்டுப் பாடல், நடனம், நாடகம் ஆகியவற்றில் கனிஷ்ட சிரேஷ்ட பிரிவுகளாக மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் வெவ்வேருகப் போட்டிகள் நடாத்தப்பட்டன. கூட்டுறவு உதவி ஆக்கஆணையாளர் பிரிவில் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே இப்போட்டிகளுடன் வில்லுப்பாட்டு, அட்டை வாக்கியம் புனைதல் ஆகிய போட்டிகளும் நடாத்தப்பட்டன. கட்டுரை, கவிதை, நாடகம் எழுதுதல் ஆகிய போட்டிகள் '' ஐக்கிய தீபம்'' மூலம் நடாத்தப் பட்டன.

### ஐக்கிய தீபம்

கூட்டுறவுத் துறையில் ஒரேயொரு தமிழ்ச் சஞ்சிகையாக இலங்கையிலே திங்கள் தோறும் '' ஐக்கிய தீபம்'' வெளிவருகின்றது. தமிழ் பேசும் பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தனிப்பட்ட சந்தாதரர்களுக்கும் கூட்டுறவுத் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கும், பத்திரிகை அலுவலகங்களுக்கும் இச் சஞ்சிகை அனுப்பப்பட்டு வருகின்றது. சர்வதேசக் கூட்டுறவுத் தினவிழாவையிட்டும், திரு. இ. இராசரத்தினம் அவர்களது மறைவு குறித்தும் இச்சஞ்சிகையினை விசேட இதழாக வெளியிட்டுள்ளோம்.

சந்தா செலுத்தியவர்களுக்கு இச்சஞ்சிகையை அனுப்பினுல்தான் இதற்கான செலவினங்களைத் தாங்க முடியும் என்பதால் கடந்த சில காலங்களாகச் சந்தா கோரிவருகிறோம். எனவே, சங்கங்களும் கூட்டுறவாளர்களும் கூட்டுறவு வளர்ச்சிக்கு இச்சஞ்சிகையினது சேவையின் அவசியம் கருதி சந்தாதரராகச் சேருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

### எமது அனுதாபம்

எமது குழு உறுப்பினரில் ஒருவரும், கூட்டுறவுத் துறையில் புதியதோர் விழிப்பினை மலர்வித்தவருமான கூட்டுறவுப் பெரியார் திரு. இ. இராசரத்தினம் அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்தமை கூட்டுறவுத்துறைக்கு அளப்பரிய இழப்பாகும். தனது வாழ்நாள் முழுவதும் கூட்டுறவுக்கு அரும்பணியாற்றியதுடன் வீரசிங்கம் மண்டபமும், யாழ்ப்பாணம் ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்

சபையின் அலுவலகமும் அழகுற இன்று மிளிர்வதற்கு காரணகர்த்தாக்களில் ஒருவரான அன்னார் ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுத் சபையின் உபதலைவராக தனது இறுதிக்காலத்தில் சேவை புரிந்தார்.

**நன்றி**

நாம் கூட்டுறவு வளர்ச்சிக்கென எடுத்துக்கொண்ட சகல முயற்சிகளுக்கும் எம்முடன் ஒத்துழைத்த மாவட்டக்குழு உறுப்பினர்களுக்கும், சங்கங்களுக்கும் நன்றி கூறுகின்றோம். கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் (அபிவிருத்தி) திரு. சி. நாகலிங்கம் அவர்கள் நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்திற்கும் எமக்கு உறுதுணையாக இருந்து ஆலோசனை கூறி அரிய உதவி நல்கியுள்ளார். அன்னாருக்கும் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் (விரிவாக்கம்) திரு. ரி. கந்தசாமி, கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் (எண்பார்வை) திரு. வி. மகேந்திரன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் (பனம்பொருள் உற்பத்தி) திரு. வி. துரைரத்தினம் ஆகியோருக்கும், கூட்டுறவுச் சுாரியாலயப் பரிசோதகர்களுக்கும், கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

| | |
|---|---|
| க. கந்தையா (தலைவர்) | பொ. செல்வரத்தினம் (செயலாளர்) |
| ஸ்ரீ ல. தே. கூ. சபை | ஸ்ரீ ல. தே. கூ. சபை |
| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |

# கட்டுரைப் போட்டி முடிவு

சர்வதேசக் கூட்டுறவுத் தினத்தை யொட்டி யாழ்ப்பாண ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபை நடாத்திய கட்டுரைப் போட்டியில் கீழ்ப்பிரிவில் பரிசு பெற்றவர்கள்.

(1) இராசரத்தினம் பாலபாஸ்கரன்
(மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பளை)

(2) ஜெயவாணி நாகலிங்கம்
(மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பளை)

(3) ஸ்ரீதேவன் பஞ்ராட்சரம்
(மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பளை)

வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்

# வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு ஆசன அமைப்பு
மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

## வாடகைக் கட்டணங்கள்

**நாடகம், நடனம்**

| | | |
|---|---|---|
| இரவு | 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| பகல் | ,, ,, | 200-00 |

**இசை நிகழ்ச்சிகள்**

| | | |
|---|---|---|
| இரவு | ,, ,, | 175-00 |
| பகல் | ,, ,, | 150-00 |

**ஏனைய நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |

**திருமணம் – பகல் அல்லது இரவு**

| | |
|---|---|
| முதல் 3 மணித்தியாலங்கள் | 250-00 |
| (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |

**பிணை**

| | |
|---|---|
| இரவு | 150-00 |
| பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)
12, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
7238

கூட்டுறவுத்தொடர்பு ஒரு நல்ல தொடர்பு

வடபகுதி விவசாய
உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்
அகில இலங்கை
கூட்டுறவு நுகர்ச்சியாளர்
சமாசத்துடன்
இணைந்து தற்பொழுது

ஸ்ரீலங்கா கூட்டுறவு
சந்தைப்படுத்தும் சம்மேளனமாக

இயங்கி வருகின்றது.
இவ்விணைப்பு
உற்பத்தியாளரையும், நுகர்ச்சியாளரையும்
மேலும் நெருங்கிய தொடர்பு கொள்ள
உதவியளிக்கின்றது.

உங்கள் வருங்காலத்திட்டத்தைக் கூட்டுறவுக்கூடாக அமையுங்கள்.

திறமான சேவை, பாதுகாப்பு, வெற்றிக்கு
ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சந்தைப்படுத்தும்
சம்மேளனத்தை ஆதரியுங்கள்.

ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சந்தைப்படுத்தும் சம்மேளனம்

127, கிரான்பாஸ் வீதி,
கொழும்பு 14.
தொலைபேசி 25642-24991
தந்தி "கொன்கம்"

111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 504
தந்தி "அப்பீஸ்"

Published by the Jaffna District Committee, National Co-operative Council of Sri Lanka Ltd., (formerly known as the Northern Division Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at the J. Municipality M.P.C.S. Printing Branch, the Co op. Printers Ltd., Jaffna, (formerly Northern Province Co-operative Printing and Publishing Society Ltd.)